

துணை முதலமைச்சரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அரூர் அரசு மருத்துவமனையில் நவம்பர் 27 ஆம் தேதி அன்று பிறந்த 2 குழந்தைகளுக்கு மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தீ.கோடீஸ்வரன் ஏற்பாட்டில் தர்மபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தங்க மோதிரம் அணிவித்து,20 குழந்தைகளுக்கு மேட்ரிக்ஸ் பெட், மற்றும் பெட்சீட்,பழங்களை வழங்கினார்.உடன் மாவட்ட துணை செயலாளர் சி.கிருஷ்ணகுமார்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு,ஒன்றிய செயலாளர்கள் சந்திரமோகன்,வேடம்மாள், சௌந்திரராசு, முத்துக்குமார்,செங்கண்ணன்,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்தநாள்: சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் இளையோர் சதுரங்கப் போட்டி!

## ஒரு லட்சம் பரிசு! மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், டிச.20-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின், பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் டிசம்பர் 22ந் தேதி மாநில அளவிலான இளையோர் சதுரங்கப் போட்டி நடைபெறுகிறது என்றும் வெற்றி பெற்றவருக்கு ஒரு லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது என்றும் மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட



தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளையொட்டி மாநில அளவிலான மாபெரும் இளையோர் சதுரங்கப் போட்டி SDCA அங்கீகாரத்துடன் 22ம் தேதி வாழப்பாடியில் உள்ள, சேலம் கிழக்கு மாவட்ட கழக அலுவலகம், தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

இந்த சதுரங்க போட்டியில் மாணவ, மாணவிகள், சதுரங்க விளையாட்டு வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிபெறுமாறு கேட்டு கொள்கிறேன். சதுரங்கப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் www.salemsportswing.in/ என்ற இணையத்தில் பதிவு செய்யவும். பதிவு கட்டணம் இல்லை, விளையாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு மதிய உணவு, விளையாட்டு பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும்.

இப்போட்டியில் சிறுவர் பிரிவில் வெற்றி பெறும் முதல் 25 நபர்களுக்கு கேடயம், சான்றிதழுடன் கூடிய ரொக்கப்பரிசும், சிறுமியர் பிரிவில் வெற்றி பெறும் முதல் 20 நபர்களுக்கு கேடயம், சான்றிதழுடன் கூடிய ரொக்கப்பரிசும், சிறப்பு பரிசாக 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு 3 பரிசுகளும், 8 வயதுக்குட்பட்டவர்களுக்கு 3 பரிசுகளும், என மொத்தம் ஒரு லட்சம் ரொக்கப்பரிசு வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 20.12.2024 வெள்ளிக்கிழமை | மாலை 4.00 மணி | 7 | சீர்காழி | ஏ.ஆர்.எம். மஹால், பைபாஸ் சாலை, சீர்காழி. |
| 21.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | | பட்டுக்கோட்டை | குமரன் திருமண மஹால், முத்துப்பேட்டை சாலை, பட்டுக்கோட்டை. |
| | மாலை 4.00 மணி | | அறந்தாங்கி | நூர் மஹால், கட்டுமாவடி சாலை, அறந்தாங்கி, புதுக்கோட்டை. |
| 20.12.2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | 8 | மானாமதுரை | அனுசுயா மஹால், மானாமதுரை. |
| | மாலை 4.00 மணி | | சிவகங்கை | மாஷா மஹால், அரண்மனை வாசல், சிவகங்கை. |
| 21.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | | திருப்பத்தூர் | காந்திமதி மஹால், சிங்கம்புனரி, சிவகங்கை. |
| | மாலை 4.00 மணி | | காரைக்குடி | அபூர்வா மஹால், காரைக்குடி |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-12-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### கோவை மாவட்டம், பேரூர் திருக்கோயிலுக்கு பிப்ரவரி 10 அன்றும் -

# மருதமலை திருக்கோயிலுக்கு ஏப்ரல் 4 அன்றும் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச. 20-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நேற்று முன்தினம் (18.12.2024) ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு அவர்கள் முன்னிலையில் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயி லில், அத்திருகோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பயன்பாட்டில் இல்லாத 28 கிலோ 906 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் பொள்ளாச்சி கிளை மேலாளரிடம் ஒப்படைத்தார். பின்னர், பொள்ளாச்சி, பெடரல் வங்கியின் சார்பில் பக்தர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ரூ. 6 இலட்சம் மதிப்பிலான மின்கல ஊர்தியினை திருக்கோயில் நிர்வாகத்திடம் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, பேரூர், பட்டீஸ்வர சுவாமி திருக்கோயில் மற்றும் மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிப்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவு பெற்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு



குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களில் பயன்பாட்டில் இல்லாத பொன் இனங்களை ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்து வருவாய் ஈட்டுதல் என பல்வேறு முனைப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பல ஆண்டுகாளக நிறைவேற்றப்படாமல் கிடப்பில் இருந்த தங்க முதலீட்டு திட்டத்தினை புதுப்பிக்க முதலமைச்சர் அவர்களின் உத்தரவை பெற்று, இதுவரை 13 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்கள் உருக்கி, 442 கிலோ 107 கிராம் எடையுள்ள சுத்த தங்க கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.5.79 கோடி வட்டித் தொகையாக கிடைக்கப் பெற்று அந்தந்த திருக்கோயில்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து கடந்த 12 ஆம் தேதி குடமுழுக்கு நடைபெற்ற ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களை ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு அவர்கள் முன்னிலையில் கல், அரக்கு, அழுக்கு நீக்கி, பக்தர்கள் முன்னிலையில் எடையிட்டு 28 கிலோ 906 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைத்துள்ளோம். இந்த பலமாற்றுப் பொன் இனங்கள் இரு தினங்களில் மும்பைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உருக்கி பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்படும்.

அதேபோல பழனி, சமயபுரம், திருவேற்காடு, நாமக்கல் போன்ற திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 700 கிலோ பலமாற்றுப் பொன் இனங்கள் இந்த மாத இறுதிக்குள் மும்பைக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த பொன் இனங்களும் உருக்கி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.10 கோடி திருக்கோயில்களுக்கு வட்டியாக கிடைக்கப்பெறும். இப்படி உபரியாக திருக்கோயில்களுக்கு வருமானம் கிடைப்பது தடைபட்டிருந்ததை நீக்கி செயல்படுத்தியது திராவிட மாடல் அரசாகும்.

பாம்பாட்டி சித்தர் வாழ்ந்த புனித தலமான மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த அரசுப் பொறுப்பேற்ற பின் மருதமலை திருக்கோயிலுக்கு அறங்காவலர் குழு நியமனம் செய்யப்பட்டு திருப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்த திருக்கோயிலுக்கு சாலை மார்க்கமாக வந்தாலும் சுமார் 100 படிகளை ஏறவேண்டிய நிலை உள்ளதை அறிந்து மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மின் தூக்கி பணியானது வரும் 2025 மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். இத்திருக்கோயிலுக்கு பெருந்திட்ட வரைவின் மூலம் மூன்று கட்டங்களாக பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. முதற்கட்ட பணி ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 2025 ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி குடமுழுக்கு நடத்திடும் வகையில் பணிகள் விரைவுபடுத்தப்படும். இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகளில் திருக்கோயி லுக்கு நிரந்தர வருமானம் ஈட்டும் வகையில் திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் போன்றவை கட்டப்படவுள்ளன. இப்பணிகள் அடுத்தாண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்படும். இத்திருக்கோயிலைப் பொறுத்தளவில் அறங்காவலர் குழுவின் சீரிய முயற்சியினால் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திடும் வகையில் அதிக எண்ணிக்கையிலான பணிகள் உபயதாரர் நிதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. திராவிட மாடல் ஆட்சியில் இதனையும் ஒரு ஆன்மிக புரட்சி என்றே சொல்லலாம்.

பூண்டி, வெள்ளியங்கிரி மலை அடிவார திருக்கோயிலில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம், சுகாதார வளாகம் உள்ளிட்ட பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 80 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளது. வெள்ளியங்கிரி மலைக்கு பக்தர்கள் செல்ல படிகள் அமைக்க வனத்துறையின் அனுமதி பெற வேண்டியுள்ளது. இதுபோன்ற மலைத் திருக்கோயில்களுக்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறுவது தொடர்பாக வரும் ஜனவரி மாதத்தில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வனத்துறை இணைந்து கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி முடிவுகள் மேற்கொள்ளப்படும். பாம்பாட்டி சித்தருக்கு ரூ.1 கோடியில் மணிமண்டபம் கட்டும் பணியை விரைவில் தொடங்கி வைக்கவுள்ளோம்.

கொங்கு மண்டலத்தை பொறுத்தளவில் பல்வேறு தொன்மையான திருக்கோயில்கள் இந்த அரசால் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகிறது. அதற்கு உதாரணமாக சேலம், கோட்டைமாரியம்மன் திருக்கோயில், ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயில் என சொல்லிக்கொண்டே போகலாம். இறையன்பர்கள் மகிழ்ச்சி அடைகின்ற வகையில் அளப்பரிய பணிகளை இந்து சமய அறநிலையத்துறை தொடர்ந்து நிறைவேற்றும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், பொள்ளாச்சி சார் ஆட்சியர் செல்வி ஏ.கேத்ரின் சரண்யா, இணை ஆணையர்கள் திருமதி இரா. வான்மதி. பி. இரமேஷ், துணை ஆணையர் திருமதி விஜயலட்சுமி. உதவி ஆணையர் கைலாசமூர்த்தி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர்கள் முரளி கிருஷ்ணா, ஜெயக்குமார் மற்றும் அறங்காவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின் படி கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய்களில் 9,012 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 120 நாட்களுக்கு இரண்டாம் போக விவசாய பாசனத்திற்காக தண்ணீரை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் , மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு ஆகியோர் திறந்து வைத்தனர். உடன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் செந்தில்குமார், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம் வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், ரஜினி செல்வம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# உணர்ச்சியுடன் உறுதியேற்போம்!

பெரியார் கண்டெடுத்த
பகுத்தறிவுச் சுடரொளி..

பேரறிஞர் அண்ணா போற்றிய
ஆற்றல்மிகு பேராசிரியர்...

கலைஞர் தம் அண்ணனென்று
நெகிழ்ந்து மகிழ்ந்த ஆருயிர் நண்பர்...

மாண்புமிகு முதல்வர், தலைவரின்
மனம்நிறைந்த பாசமிகு பெரியப்பா...

மாண்புமிகு துணைமுதல்வர்
இளைய (உதய) சூரியனின் பெரிய தாத்தா..

அன்புச்செல்வன் அருமை மகன்
இனமான செயல்வீரர் வெற்றியழகனின்
ஆருயிர் தாத்தா.

தமிழ்மொழி தழைத்திட நாடெல்லாம்
பகுத்தறிவு முழக்கமிட்ட...
திராவிடத்தின் திருவிளக்கு



**இனமான பேராசிரியர் பெருந்தகையின்**
பிறந்தநாளை போற்றிக் கொண்டாடுவோம்...

அரசியல் களத்தில் குறுக்கு வழிகளில்
வெற்றிக்கான முகமூடி அணிந்துவரும் தமிழின
துரோகிகளை - தி.மு.கழக எதிரிகளை வென்றெடுத்து
தமிழர் நலம் காக்க எழுச்சியுடன் வா.. உடன்பிறப்பே!

**பேராசிரியர்.
த.ல.கோ.இளங்கோவன்**




டிசம்பர்-19 & 20
பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள
ஈரோடு வருகை தரும்

கலைஞரின் புதல்வரே
மக்களின் முதல்வரே
திராவிட மாடல் ஆட்சியின் அரசே
திக்கெட்டும் ஒலிக்கும் சமூகநீதி முரசே

வருக! வருக!! ஈரோட்டு குருகுலம்
உங்களை அன்போடு வரவேற்கிறது



மகிழ்வுடன் வரவேற்கும்
மாண்புமிகு சு.முத்துசாமி MA.,
மாவட்ட கழக செயலாளர்
வீட்டு வசதி நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர்

ஜெ.திருவாசகம் ME,MBA.,
மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்
ஈரோடு தெற்கு மாவட்ட திமுக